**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 392/2023</u>**
**<u>வழக்கு சாட்சி PW–12</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திரசேகரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சங்கரம்பிள்ளை | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | மானூர் | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 22nd, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது மானூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஆலங்குளம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 07.05.2022ம் தேதி, 23.25 மணிக்கு காவல் நிலைய குற்றஎண்.164/2022 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

08.05.2022ம் தேதி, 00.15 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.10** ஆகும். வரைபடம் **அ.சா.ஆ.11** ஆகும். மேலும் சம்பவயிடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் இரத்தம் படிந்த மண் சிறிதளவு, இரத்த கறை படாத மண் சிறிதளவு ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.12** ஆகும். பின்னர், சாட்சிகள் சுரேஷ், இரத்தினம், குமார், செந்தில்குமார், லீலா, வேல்த்தாய் மற்றும் உதவி

ஆய்வாளர் தினேஷ்பாபு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், அதே தேதியில் 02.30 மணியளவில் வழக்கின் எதிரிகளை ஆலங்குளம் புதிய பேருந்து நிலையம் அருகே வைத்து கைது செய்து, சாட்சிகள் முருகேசன் மற்றும் சண்முகம் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எதிரி ரவிச்சந்திரன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால் நாங்கள் சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாள், கம்பு மற்றும் கல்லை தங்களிடம் அடையாளம் காண்பித்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.13** ஆகும்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகளையும், சாட்சிகளையும் உடன் அழைத்துக்கொண்டு அன்றைய தினம் 03.45 மணியளவில் ரவிச்சந்திரன் என்பவரை துத்திகுளம் கீழக்காலனியிலுள்ள அவரது வீட்டிற்கு முன்பு வந்து எதிரி ரவிச்சந்திரன் அவரது வீட்டிற்கு முன்பு கிடந்த தென்னையோலையின் அடியில் மறைத்து வைத்திருந்த அரிவாள் ஒன்று, கம்பு ஒன்று, கருங்கல் ஒன்று ஆகியவற்றை எடுத்து ஆஜர்படுத்தினார். அதனை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.14** ஆகும். பின்னர், சாட்சிகள் முருகேசன், சண்முகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு, எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை 05.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து, நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம்

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட இரத்தம்பட்ட ஜல்லியுடன் கூடிய மண் கொஞ்சம் மற்றும் இரத்தம் படாத ஜல்லியுடன் கூடிய மண் கொஞ்சம் ஆகியவற்றிற்கான படிவம் 91 **அ.சா.ஆ.15** ஆகும். கைப்பற்றப்பட்ட அரிவாள் ஒன்று, கம்பு ஒன்று, கருங்கல் ஒன்று ஆகியவற்றிற்கான படிவம் 91 **அ.சா.ஆ.16** ஆகும். இரத்தம்பட்ட ஜல்லியுடன் கூடிய மண் கொஞ்சம் – அ.சா.பொ.4 ஆகும். இரத்தம் படாத ஜல்லியுடன் கூடிய மண் கொஞ்சம் – அ.சா.பொ.5 ஆகும்.

08.05.2022ம் தேதி, அதிகாலை 05.40 மணிக்கு நிலையத்தில் வைத்து எதிரி சுந்தர்ராஜ் என்பவருக்கு மாற்று உடை கொடுத்து, அவர் உடுத்தியிருந்த பச்சை கலர் முழுக்கை சட்டை ஒன்று, துண்டு ஒன்று படிவம் 91ன் மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.17** ஆகும். பச்சை கலர் முழுக்கை சட்டை ஒன்று – அ.சா.பொ.6 ஆகும். துண்டு ஒன்று – அ.சா.பொ.7 ஆகும்.

அதே தேதியில், அதிகாலை 05.30 மணிக்கு நிலையத்தில் வைத்து எதிரி ரவிச்சந்திரன் என்பவருக்கு மாற்று உடை கொடுத்து, அவர் உடுத்தியிருந்த புளூ கலர் அரைக்கை சட்டை ஒன்று, புளூ வெள்ளை கருப்பு கட்டம் போட்ட சாரம் ஒன்று படிவம் 91ன் மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.18** ஆகும். புளூ கலர் அரைக்கை சட்டை ஒன்று – அ.சா.பொ.8 ஆகும். புளூ வெள்ளை கருப்பு கட்டம் போட்ட சாரம் ஒன்று– அ.சா.பொ.9 ஆகும்.

அதே தேதியில், அதிகாலை 05.50 மணிக்கு நிலையத்தில் வைத்து எதிரி சின்னக்குட்டி என்பவருக்கு மாற்று உடை கொடுத்து, அவர் உடுத்தியிருந்த வெள்ளை கலர் அரைக்கை சட்டை ஒன்று, புளூ கருப்பு,

வெள்ளை கலர் கட்டம் போட்ட சாரம் ஒன்று படிவம் 91ன் மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.19** ஆகும். வெள்ளை கலர் அரைக்கை சட்டை ஒன்று – அ.சா.பொ.10 ஆகும். புளூ கருப்பு, வெள்ளை கலர் கட்டம் போட்ட சாரம் ஒன்று– அ.சா.பொ.11 ஆகும்.

பின்னர், 10.05.2022ம் தேதி, காயம்பட்ட இராமசாமி, தங்கத்தாய் ஆகியோர்களை திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.05.2022ம் தேதி, இவ்வழக்கில் காயம்பட்ட இராமசாமி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று காயச்சான்று வழங்கிய ஆலங்குளம் அரசு மருத்துவமனை மருத்துவர்.முத்துலட்சுமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். பின்னர், வழக்கின் விசாரணையை முடித்து, அதே தேதியில் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 307, 506(2) IPC –ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடப்பதற்கு முன்னால், 15.01.2022 அன்று 1ம் எதிரி ரவிச்சந்திரன் அவருடைய மனைவியிடம் சாட்சி இராமசாமி தகாத உறவு வைத்து குடும்பத்தை பிரிக்க நினைத்ததாக காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் அவருடைய குடும்ப பிரச்சனைக்காக அடிக்கடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அந்த புகாருக்கு பிறகு இராமசாமி எதிரி ரவிச்சந்திரனின் மனைவியை அழைத்து கொண்டு சென்று வேறு இடத்தில் குடிவைத்தார் என்று புகார் மனு கொடுத்திருந்தார் என்றால் நிலைய ஆவணங்களைப் பார்த்தால் தான் சொல்ல முடியும்.

என்னிடம் புகார் மனு இரசீது அவ்வாறு கொடுக்கப்பட்டது என்றால் என்னால் காவல்நிலைய ஆவணங்களைப் பார்த்தால் தான் சொல்ல முடியும்.

(சாட்சியை குறுக்கு விசாரணை செய்தபோது, சாட்சியிடம் நகல் ஆவணத்தை காண்பித்து கேட்டார். அதற்கு இந்நீதிமன்றம் அசலை காண்பித்து கேட்க சொன்னது. உடனே, கற்றறிந்த வழக்கறிஞர் நீதிமன்றத்தின் மாண்பை குலைக்கும் வகையில் சத்தம் போட்டு, எனக்கு இங்கு நீதி கிடைக்காது என்று பேசினார். மேலும், எதிரிகள் எஸ்.சி Caste என்றும், சாட்சிகள் நாடார் ஜாதி என்றும் நீதிமன்றம் ஒருதலைபட்சமாக ஜாதி அடிப்படையில் இருக்கிறது என்றும் நீதிமன்றத்தின் மாண்பை குலைக்கும் வகையில் பேசி, நான் குறுக்கு விசாரணை செய்ய மாட்டேன் என்று கூறி, குறுக்கு விசாரணை செய்வதை நிறுத்தி கொண்டார். கற்றறிந்த வழக்கறிஞரின் செயலுக்கு இந்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்து அவரை கண்டித்தது. பின்னர், அவர் சத்தம் போட்டு பேசுவதை நிறுத்தி விட்டு அமைதியாக நின்றார். எனவே, அவர் மீது மேல்நடவடிக்கை எதுவும் இந்நீதிமன்றம் எடுக்கவில்லை.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.23 17:04:00 +0530